# இலங்கை துறைமுக அதிகாரசபை

# பதவி வெற்றிடங்கள்

இலங்கை துறைமுக அதிகாரசபையில் கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமைகளையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்கப்படுவது எந்த துறைமுகத்தின் வெற்றிடத்திற்கென விண்ணப்பப்படிவத்தில் தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும். ஒவ்வொரு துறைமுகம் தொடர்பிலும் வெவ்வேறாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுவது கட்டாயமாகும்.

**பதவி: கடற் கல இணைப்பு அலுவலர் (காலி / திருகோணமலை) (Sea Traffic Cordinator (Galle / Trincomalee))**
**(வெற்றிட எண்ணிக்கை : 03)**

**(அ) சம்பளம் :**

தரம் மற்றும் சம்பளக் குறியீட்டு இலக்கம் :- மேற்தரம் - 6:3 (SG3)
ஆரம்பச் சம்பள முறை :- ரூ. 53,425/=
வருடாந்த சம்பள ஏற்றம் :- ரூ. 1,150/=
(மாதாந்த மொத்தச் சம்பளம் :- ரூ. 132,000/= அளவினதாக இருக்கும்)

**(ஆ) தகைமைகள் :**

க.பொ.த(உதரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

கரையோர கடற் பயணங்களில் (N.C.V) ஈடுபடும் (GT) 3000 இற்குக் குறையாத கப்பல்களில் கல அதிபரொருவராக சேவையில் ஈடுபடும் பொருட்டு இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகார தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது அவுஸ்திரேலிய அல்லது இந்திய அரசுகளினால் வழங்கப்பட்ட அதற்கு சமனான அங்கீகார தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது அவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்ட வேறு உயர் மட்டத்திலான அங்கீகார தேர்ச்சிச் சான்றிதழ்.

அல்லது

இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட வேறு உயர் மட்டத்திலான அங்கீகார தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது அவுஸ்திரேலிய அல்லது இந்திய அரசுகளினால் வழங்கப்பட்ட அதற்கு சமனான அங்கீகார தேர்ச்சிச் சான்றிதழ்.

மற்றும்

உலகளாவிய கடல் சார் இடர்கள் மற்றும் பாதுகாப்பு முறைமை (GMDSS) சான்றிதழ்

அல்லது

அதற்கு சமனான வேறு சான்றிதழ்.

மற்றும்

இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட ரேடார் கண்காணிப்பு சான்றிதழ் அல்லது அதற்கு சமனான சான்றிதழ்.

அத்துடன்

**அனுபவம்**

கப்பலொன்றில் கடமைப் பொறுப்பு அலுவலரொருவராக ஒரு (01) வருட சேவைக் காலம் அனுபவம்.

**(இ) ஏனைய கட்டாய தேவைப்பாடுகள் :**

1. அதி உயர் எண்ணலை தகவல் பரிமாற்ற சாதனம் (V.H.F) உபயோகித்து சமிக்ஞை வழங்கும் அறிவு மற்றும் ஆற்றல்.
11. ஆங்கில மொழியில் சிறப்பாக பேசும் ஆற்றல்.

**(ஈ) வயதெல்லை :**

18-45 வயதிற்கிடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். (அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதல்ல) இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் முன்னாள் படை வீரர்களுக்கு பொது நிர்வாக அமைச்சின் 299ஆம் இலக்க மற்றும் 1985.07.23ஆம் திகதிய சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் எற்புடையதாக இருக்கும்.

**பதவி : பயிலுநர் சுழியோடி (கொழும்பு) (Apprentice Diver (Colombo))**
**(வெற்றிட எண்ணிக்கை - 04)**

பயிலுநர் சுழியோடிகளாக பயிற்சிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவதுடன், பயிற்சியினை வெற்றிகரமாக முடிக்கும் பயிலுநர்கள் கடலக சுழியோடி பதவிக்கு நியமிக்கப்படுவர்.

**(அ) சம்பளம் :**

தரம் மற்றும் சம்பளக் குறியீட்டு இலக்கம் :- தொழினுட்பம் - 7:3 (T 3)
ஆரம்பச் சம்பள முறை :- ரூ. 46,665/=
வருடாந்த சம்பள ஏற்றம் :- ரூ. 1,005/=
(மாதாந்த மொத்தச் சம்பளம் :- ரூ. 125,330/= அளவினதாக இருக்கும்)

**(ஆ) தகைமைகள் :**

க.பொ.த.(சா/தரம்) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வில் மொழி மற்றும் கணிதம் ஆகிய பாடங்களுடன் 06 பாடங்கள் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

அரசாங்கத்தினால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட சுழியோடி தேர்ச்சி தொடர்பான சான்றிதழ்.

மற்றும்

தேசிய பயிலுநர் சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் கல்லூரியொன்றில் இயந்திர நுட்பவியலாளர் அல்லது ஒட்டுபவர் மூன்று வருட முழு நேரப் பாடநெறி சான்றிதழ் அல்லது இயந்திர நுட்பவியலாளர் அல்லது ஒட்டும் தொழிலுக்கான நான்காம் மட்டத்தின் தேசிய தொழிற் தகைமை சான்றிதழ் (NVQ 4) அல்லது அரசாங்கத்தால் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழினுட்ப அல்லது தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் அதற்குச் சமனான சான்றிதழ்

அத்துடன்

அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் உரிய துறையில் மூன்று(03) வருட அனுபவம்.

**(இ) ஏனைய கட்டாய தேவைப்பாடு :**

திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.

**(ஈ) குறிப்பு**

1. பயிலுநர்களாக பயிற்சி பெறும் காலத்தினுள் T3 சம்பள வகையீட்டின் ஆரம்ப சம்பள முறையின் மீது ஆட்சேர்த்துக் கொள்ளப்படுபவரொருவருக்கு உரித்தாகும் சம்பளத்தை அண்மித்த பெறுமதிகொடுப்பனவாக பயிலுநர் காலம் முடிவடையும் வரை மாதாந்தம் வழங்கப்படும்.
2. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் சுழியோடிகளாக சேவையில் ஈடுபடுத்தும் தகுதித்திறனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அவர்களுக்கு சுழியோடுதல் தொடர்பான ஆறு (06) மாத பயிற்சி வழங்கப்படும். இதற்கு தகைமையற்றவரென கருதப்படுபவர்களின் பயிற்சி முடிவுக்குக் கொண்டு வரப்படும். பயிற்சி காலகட்டத்தினுள் சுழியோடுதல் தொடர்பான தேர்ச்சியினைக் காட்டும் அபேட்சகர்களை கடமையில் வைத்துக் கொண்டு அவர்களுக்கு மீண்டும் மேலதிகமாக இரண்டரை (2½) வருட பயிற்சி வழங்கப்படும்.
3. பயிலுநர் சுழியோடிகளாக மேலதிக பயிற்சிக்கு வைத்துக் கொள்ளப்படுபவர்கள் திருப்திகரமான முறையில் பயிற்சிக் காலத்தினை பூர்த்தி செய்து அதன் பின்னர் ஐந்து(05) வருட காலத்திற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் கடலக சுழியோடியொருவராக கடமையாற்றுவதாக அதிகாரசபையுடன் பிணை/ உடன்படிக்கைக்கு உடன்படுதல் அவசியமாகும்.
4. மேலே இலக்கம் 2 இனில் குறிப்பிடப்பட்டுள்ள நீடிக்கப்பட்ட பயிற்சிக் காலத்தினுள் பயிலுநர்கள், அதிகாரசபையினால் நடாத்தப்படும் எழுத்து மூல அல்லது செயன்முறை பரீட்சையினை வெற்றிகரமாக நிறைவு செய்தல் அவசியமாகும். பயிற்சி காலத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் 7:3 (T3) சம்பள வகையீட்டின் கடலக சுழியோடி பதவிக்கு நியமிக்கப்பட்டு (T3) சம்பள வகையீட்டின் இரண்டு சம்பள ஏற்றங்களை பெற்றுக் கொண்டதன் பின்னர் உரித்தாக வேண்டிய சம்பள முறையின் மீது அமர்த்தப்படுவர்.

**உ) வயதெல்லை :**

18 வயதை விடக் குறையாதவராகவும் 30 வயதை தாண்டாதவராகவும் இருத்தல் வேண்டும். (அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதல்ல) இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் முன்னாள் படை வீரர்களுக்கு பொது நிர்வாக அமைச்சின் 299ஆம் இலக்க மற்றும் 1985.07.23ஆம் திகதிய சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் எற்புடையதாக இருக்கும்.

**ஏனையவை**
**சகல விண்ணப்பதாரிகளும்,**

1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. பதவி தொடர்பில் ஒப்படைக்கப்படும் பணிகளை சிறப்பாக நிறைவேற்றுதல் போலவே நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு அவசியமான உடல்,உள தகுதியினையுடையவராக இருத்தல் வேண்டும்.
3. சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
4. நேர்முகக் குழுவின் தீர்மானத்தின் படி அல்லது பதவிக்கு அவசியமாயின் மருத்துவப் பரிசோதனையொன்றில் சித்தியடைதல் வேண்டும்.
5. இப் பதவி நிரந்தரப் பதவியொன்றாவதுடன் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு உரித்துடையதாகும்.
6. அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்கள/ கூட்டுத்தாபன தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். மேலே பதவிகளுக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படின் குறித்த திணைக்களம்/ கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க இணங்கும் குறிப்பொன்றும் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

பூரண சுயவிபரங்கள் உள்ளடங்கிய பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், ஏனைய உரிய கல்வி மற்றும் தொழிற் தகைமை சான்றிதழ்கள், சேவைச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் உறவினரல்லாத பரிந்துரையாளர்கள் இருவரின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பதிவுத் தபாலில் 2026.09.30ஆம் திகதிக்கு முன்னர் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். தபாலில் காணாமல் போகும் அல்லது தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பில் இலங்கை துறைமுக அதிகாரசபை பொறுப்பேற்கமாட்டாது. குறித்த விண்ணப்பப்படிவத்தின் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் தினத்திற்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பிரதான முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிர்வாகம்),**
**மனிதவளம் மற்றும் நிர்வாகப் பகுதி,**
**இலங்கை துறைமுக அதிகாரசபை, கொச்சிக்கடை, கொழும்பு 13.**

Gazette.lk
SINCE 2014
AMBITIONS REALIZED